தி.மு.கழகத்தில் 2 கோடி உறுப்பினர்களைச் சேர்க்க

‘ஓரணியில் தமிழ்நாடு’ உறுப்பினர் சேர்க்கை இயக்கம்!

ஜூலை 1 அன்று முதல்வர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார்!

அமைச்சர் தங்கம் தென்னரசு – கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பேட்டி!

சென்னை, ஜூலை 25-

தி.மு.கழகத்தில் 2 கோடி உறுப்பினர்களை சேர்க்க ‘ஓரணியில் தமிழ்நாடு’ உறுப்பினர் சேர்க்கை இயக்கத்தை ஜூலை 1 ஆம் தேதி தமிழ்நாடு முதலமைச்சர் தொடங்கி வைக்கிறார்! தமிழ் மொழி சமஉரிமை பெற்றிட தமிழ்நாடு ஓரணியில் திரள வேண்டும்! பெரியாரையும், அண்ணாவையும் பழித்தவர்கள் யாரும் தமிழ்நாட்டு அரசியலில் தலையெடுத்தது இல்லை! என செய்தியாளர்கள் சந்திப்பில் அமைச்சர் தங்கம் தென்னரசு - கழக அமைப்புச் செயலாளர் ஆர். எஸ்.பாரதி தெரிவித்தனர்.

24.06.2025 அன்று பிற்பகல் அமைச்சர் தங்கம் தென்னரசு, அமைச்சர் அமைச்சர் மூர்த்தி, ஆர்.எஸ்.பாரதி, ஆகியோர் சென்னை, தேனாம்பேட்டை, அண்ணா அறிவாலயத்தில் செய்தியாளர்களைச் சந்தித்தனர்.

இதுபற்றிய செய்தி அறிக்கை வருமாறு :-

‘ஓரணியில் தமிழ்நாடு’ என்ற பெயரில் திமுகவின் உறுப்பினர் சேர்க்கைக்கான பணியை நாங்கள் தொடங்கியிருக்கிறோம்.

வரக்கூடிய ஜூலை மாதம் 1 ஆம் தேதி முதலமைச்சர் அவர்கள் இது குறித்து பத்திரிக்கையாளர்களைச் சந்தித்து, முறைப்படி உறுப்பினர் சேர்க்கையை தொடங்க இருக்கிறார்.

அடுத்த நாள் அனைத்து மாவட்டங்களில் உள்ள இடங்களிலும் ஆங்காங்கே இருக்கக்கூடிய மாவட்ட கழக செயலாளர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர் பெருமக்கள் எல்லாம் பேரணியாகச் சென்று இந்த உறுப்பினர் சேர்க்கை முகாம்களை தொடக்கி வைக்க இருக்கிறோம்.

அதை தொடர்ந்து ஜூலை மாதம் 3 ஆம் தேதி தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய 68,000 வாக்குசாவடிகளிலும் உறுப்பினர் சேர்க்கை முகாம்களை வாக்குச்சாவடி முகவர்கள், தகவல் தொழில்நுட்ப துறை முகவர்கள், மற்ற அணிகளாக இளைஞர் அணி, மகளிரணி போன்றவற்றின் நிர்வாகிகள், கிளை கழகத்துடைய நிர்வாகிகள் ஒவ்வொரு பூத்-களிலும் இருக்கக்கூடிய வீடுகளுக்கு நேரடியாக சென்று ஒவ்வொரு வீட்டிலும் தலா 10 நிமிடம் அமர்ந்து, அங்கே இருக்கும் வாக்காளர் பெருமக்களில் 30% நம்முடைய கழகத்தில் இணையகூடிய வகையில் அரசியல் பணியாற்றச் சொல்லியிருக்கிறோம்.

தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு வீட்டுக்கும் சென்று, அத்தனை வாக்காளர்களையும் சந்தித்து மண், மொழி, மானம் காக்க ஓரணியில் இணைய அழைப்பு விடுக்கப்போகிறோம்.

இதன் இன்னொருகட்டமாக, ஏறத்தாழ 2 கோடி பேரை நமது கழகத்தின் உறுப்பினர்களாக சேர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

நமது கழகத்தின் முக்கிய திட்டங்களை விளக்கி, இந்த நான்கு ஆண்டு ஆட்சி சாதனைகளை அவர்கள் இடத்தில் எடுத்து சொல்லி, டிஜிட்டலாக அவர்கள் ஒரு செயலியின் மூலமாகவும், ஒரு படிவம் மூலமாகவும் அவர்களை இணைக்கக் கூடிய முயற்சிகளை மேற்கொள்ள இருக்கிறோம்.

தமிழகத்தில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் செல்லும் அளவில் இந்த உறுப்பினர் சேர்க்கைக்கான முகாம்கள் நடைபெற இருக்கிறது. தமிழக மக்கள் எப்போதும் எந்த ஒரு அரசியல் சூழ்நிலையிலும் மதங்களையோ,சாதிகளையோ அவற்றுக்கெல்லாம் மாறுபட்டு எப்போதும் ஓரணியில் நின்று அரசியல் கருத்துகளை எடுத்து ரைப்பார்கள்.

தமிழ்நாடு எந்த ஒரு சவாலையும் எதிர்கொள்கிற போது, அது ஓரணியில் திரண்டு நிற்பதுதான் தமிழ்நாட்டிற்குரிய இயற்கையான பண்புக் கூறு என்பதை மனதில் வைத்து, இந்த ‘ஓரணியில் தமிழ்நாடு’ என்கிற உறுப்பினர் சேர்க்கையை முதலமைச்சர் அவர்கள் 1 ஆம் தேதி தொடங்கி வைக்க இருக்கிறார்.

தொடர்ச்சியாக வடமொழிக்கு அவர்கள் அதிக முக்கியத்துவத்தையும் நிதியையும் ஒதுக்கியுள்ளனர். இதனால் வடமொழிக்கு அவர்கள் கொடுக்கும் முன்னுரிமை மீண்டும் உறுதியாகியுள்ளது.

தமிழ் மொழிக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்ற காரணத்தினால் தான் கலைஞர் அவர்கள் செம்மொழி அந்தஸ்த்தை உருவாக்கினார்கள். வடமொழிக்கு இருக்க கூடிய முக்கியத்துவத்தை, மற்ற மொழிகள் உட்பட தமிழ் மொழியும் பெற முடியாமல் போயுள்ளதால் தான், தமிழ்நாடு ஓரணியில் திரள வேண்டும் என்று கூறுகின்றோம்.

திமுக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பின்வரும் செய்தியைத் தெரிவித்தார்:-

‘உடன்பிறப்பே வா’ என்ற நிகழ்வின் மூலம் ஒன்றிய, நகர, பேரூர் கழகத்துடைய செயலாளர்களை ஒவ்வொருவரையும் தனித் தனியாகச் சந்திப்பேன் என்று 1 ஆம் தேதி மதுரையில் நடைபெற்ற பொதுக்குழுவில் முதலமைச்சர் அறிவித்தற்கு ஏற்ப கடந்த 23 ஆம் தேதியில் இருந்து இதுவரை 20 தொகுதியின் ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட கழக செயலாளர்கள், மண்டல பொருப்பாளர்கள் ஆகியரோடு தலைவர் தளபதி அவர்கள் நாள்தோறும் 3 மணி நேரம் உரையாடி வருகின்றார்.

ஒவ்வொரு கூட்டமும் 3 மணி நேரத்திற்கு மேலாக அவர்களின் கருத்துகளைக் கேட்டு, தலைவரும் நிர்வாகிகளும் மனம் விட்டு பேசினார்கள். அதன் அடிப்படையில் கழகத்தின் தோழர்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன் சென்றார்கள். ஒன்றிரண்டு நாட்களில் உறுப்பினர்கள் சேர்க்கையை தொடங்க இருக்கிறார்கள். ஆகவே உணர்ச்சி யோடு, மகிழ்ச்சியோடு இந்த சந்திப்பு மிகவும் பயன் உள்ளதாக அமைந்துள்ளது.

பெரியார், அண்ணாவுக்கு அவமதிப்பு பற்றி -

நாங்கள் தெளிவாக எங்களின் அறிக்கையில் சொல்லி விட்டோம், எங்களை விட பொதுமக்கள் கொதித்து போய் இருக்கிறார்கள், தமிழ்நாடே கொதித்து போய் இருக்கிறார்கள். பெரியாரையும், அண்ணாவையும் பழித்தவர்கள் யாரும் தமிழ்நாட்டு அரசியலில் தலையெடுத்தது இல்லை. இந்த இரு பெரும் தலைவர்களையும் இழித்து பேசியதை வேடிக்கை பார்த்ததைத் திராவிட முன்னேற்ற கழகம் மட்டுமில்ல, தமிழ் உணர்வுமிக்க அனைவரும் கண்டனத்தை தெரிவித்து கொண்டு இருக்கிறார்கள். அதனை நீங்களே பார்க்கலாம். ஒரு சொல்லும் சரி, ஓர் ஆயிரம் சொல்லும் சரி உணர்ச்சி உள்ளவர்களுக்கு உறைக்கும்.

அரசு நடவடிக்கை எடுக்குமா என்கிற கேள்வி பற்றி -

மக்களே எதிர்க்கும்போது அரசு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டி இருக்கு? இதை பெரிதாக வேண்டிய அவசியம் இல்லை. மக்கள் இதை புறக்கணித்துவிட்டார்கள். நாங்கள் 100 மாநாடு நடத்தி திமுகவுக்கு சேர்க்க வேண்டிய ஓட்டை ஒரே மாநாட்டில் சேர்த்து விட்டார்கள்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

சென்னை, தியாகராய நகரில், நேற்று (24.06.2025) கவியரசு கண்ணதாசன் அவர்களின் 99வது பிறந்தநாளை முன்னிட்டு, தமிழ்நாடு அரசின் சார்பில், அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு. பெ. சாமிநாதன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, சட்டமன்ற உறுப்பினர் ஜெ. கருணாநிதி, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே. ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள், கவியரசு கண்ணதாசன் அவர்களின் குடும்பத்தினர் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. நல உதவிகள் வழங்குகிறார்! வை.ம.அருள்தாசன் ஏற்பாடு!

திருவொற்றியூர் மேற்குப் பகுதி திமுக சார்பில் கலைஞர் செம்மொழி நாள்!

ஆர்.எஸ்.பாரதி சிறப்புரை! கலாநிதி வீராசாமி எம்.பி. – கே.பி. சங்கர் – எஸ். மோகன் பங்கேற்பு!

சென்னை,ஜூன்.25- முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த நாளை சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் மேற்கு பகுதி திமுக சார்பில் மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று 25.6.2025 புதன்கிழமை மாலை 6 மணி அளவில் தாழங்குப்பம் எண்ணூர் பஜார் வீதியில் பகுதி கழக செயலாளர் வழக்கறிஞர் வை.ம. அருள்தாசன் ஏற்பாட்டில் நடைபெறுகிறது.

வட்ட கழக செயலாளர் மு. சிவக்குமார் எம். சி. பகுதி கழக நிர்வாகிகள் இ. குமரவேல், எம்.வஜ்ர வேல், ஏ. இந்துமதி, ச.முனுசாமி, க. முரளி, ந. சௌந்தர்ராஜன், ப.சுசிலா, ந. சக்கரவர்த்தி, வ.ரவி, ஜா. சரவணன், ரோ.ஆறுமுகம், ரா.கண்ணன், ஆகியோர் வரவேற்பில் மாவட்ட நிர்வாகிகள் குறிஞ்சி எஸ். கணேசன், எம். ஆனந்தன், பகுதி நிர்வாகிகள் ந. திருசங்கு, யு. எஸ். குறளரசன், வட்ட கழகச் செயலாளர்கள் டி. சேகர், பி தமிழரசன், மு.மாணிக்க வேலன், க. பவுல், கே.பி.சொக்கலிங்கம், கி.கண்ணன், அரிமா வீ. தியாகராஜன், மாவட்ட பிரதிநிதிகள், ஆர்.தினேஷ்குமார், எம்.சந்திரகுமார், ந. ராம்குமார், ஜி. தினேஷ், முருகா, எஸ். ஆறுமுகம், வி. வீரமுத்து, பொன். கோ.விஜயன், எஸ். கணேஷ், எஸ்.ஆர்.மலைராஜ், எஸ்.மகேந்திரன், இ. வி.சரவணன், அணிகளின் நிர்வாகிகள் லிவிங்ஸ்டன் ராஜ்குமார் எஸ்.செல்வம் , ஜி. முரளி, து.அல்லிமுத்து, டி. மகேந்திரன், ஆர். குமரன், எச்.ரியாஸ், டி.ஞானசேகர், எஸ்.வனிதா, பி. ஜாக்கண்ணன், டி. எஸ். மணி, ஆகியோர் முன்னிலையில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாளை முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி கொண்டாடப்படுகிறது.

இந்த நிகழ்ச்சியில் கழக அமைப்புச் செயலாளர் ஆர். எஸ். பாரதி சிறப்புரையாற்று கிறார். மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ. உரையாற்றி பொது மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குகிறார்.

இதில் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் கலாநிதி வீராசாமி , கழக மாநில மீனவர் அணி துணைத் தலைவர் கே.பி. சங்கர் எம்.எல்.ஏ., மாநில வர்த்தக அணி துணைத்தலைவர் திருவொற்றியூர் தொகுதி பார்வையாளர் எஸ்.மோகன், கிழக்கு பகுதி கழக செயலாளர் தி.மு. தனியரசு எம்.சி, மத்திய பகுதி கழக செயலாளர் ஏ. வி.ஆறுமுகம் எம்.சி, மற்றும் பகுதி, ஒன்றிய பேரூர் கழக செயலாளர்கள், மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள பங்கேற்க உள்ளார்கள். இந்த மாபெரும் பொதுக்கூட்ட நிகழ்ச்சிக்கு தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட பிரதிநிதிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாக முகவர்கள், சமூக வலைதள பாக நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள், தவறாமல் கலந்து கொள்கின்றனர்.

இறுதியில் மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளர் தழவை எஸ். ரஞ்சித் நன்றி கூறுகிறார்.

ஆ.இராசா எம்.பி. – அமைச்சர் மா.சுப்பிரமணியன் சிறப்புரை!

விருகம்பாக்கம் தொகுதி பாக தலைவர்கள் கூட்டம்!

பகுதிச் செயலாளர்கள் கே.கண்ணன் - மு.ராசா வேண்டுகோள்!

சென்னை, ஜூன், 25 -

கலைஞர் நகர் பகுதிச் செயலாளர்கள் கே.கண்ணன், மு.ராசா ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு-

விருகம்பாக்கம் தொகுதி பாக தலைவர்கள் கூட்டம், ஆற்காடு சாலையில் உள்ள காமாட்சி மாகால், (ஆவிச்சி பள்ளி அருகில்) திருமண மண்டபத்தில் நாளை (26.06.2025 காலை 9 மணியளவில் நடைபெற உள்ளது.

மண்டல பொறுப்பாளர் அ.ராசா எம்.பி. , சென்னை தெற்கு மாவட்ட செயலாளர் அமைச்சர் மா.சுப்ரமணியன் முன்னிலையில் ஆய்வு செய்ய உள்ள இக்கூட்டத்தில், ஏ. எம்.வி.பிரபாகர்ராஜா எம். எல்.ஏ., கணக்கு நிலைக்குழு தலைவர் க.தனசேகரன், தொகுதி பொறுப்பாளர் வே.உமாகாந்த் ஆகியோர் கலந்து கொள்ள உள்ளனர்.

இக்கூட்டத்தில் மாவட்ட, பகுதி நிர்வாகிகள், அனைத்து வட்ட செயலாளர்கள்,அனைத்து 270 பாக தலைவர்களும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என்று கேட்டு கொள்கிறோம்.

இவ்வாறு பகுதிச் செயலாளர் கே.கண்ணன், மு.ராசா ஆகியோர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

123வது வட்ட பாக முகவர்கள் BLA 2 கூட்டம்!

பகுதி செயலாளர் நந்தனம் கி.மதி பங்கேற்பு!

சென்னை, ஜூன் 25-

சென்னை தென்மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் மயிலை த.வேலு எம். எல்.ஏ. அறிவுறுத்தலின்படி மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் கி.மதி. எம். சி. முன்னிலையில், 123வது வட்ட செயலாளர் மு.இ.ஏழுமலை தலைமையில் BLA2 & BLC கலந்தாய்வுக் கூட்டம் இன்று (25.06.2025 - புதன்கிழமை) மாலை 6:30 மணியளவில் மயிலாப்பூர் சட்டமன்ற அலுவலகம் அருகில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் மயிலை தொகுதி பொறுப்பாளர் கோ.வி.லெனின் ஆலோசனை வழங்குகினார்.

எனவே வட்ட கழக நிர்வாகிகள், BLA2 மற்றும் BLC அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு பகுதிச் செயலாளர் நந்தனம் கி.மதி அறிக்கை விடுத்துள்ளார்.

கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம்

பொருளாளர் பொறுப்புக்கான தேர்தல்

தேர்தல் முடிவு! தலைமைக் கழக அறிவிப்பு

"திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில் கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டக் கழகப் பொருளாளராக தேர்ந்தெடுக்கப்பட்ட ஆர்.ஜெயராமன் அவர்கள் மறைவெய்திய காரணத்தால், அப்பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து **2025, ஜூன் 23 (திங்கட்கிழமை) அன்று ரூ.25000/ வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.** "என தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டதையொட்டி;

கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட பொருளாளர் பொறுப்புக்கு வீ.சு.வீரபாண்டியன் அவர்கள் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்திருந்த காரணத்தால், அவரது மனு ஏற்கப்பட்டு,

கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட பொருளாளராக,
திரு.வீ.சு.வீரபாண்டியன்,
1/1, அண்ணா குடில், கெடிலம்,
திருநாவலூர் அஞ்சல், உளுந்தூர்பேட்டை வட்டம், கள்ளக்குறிச்சி மாவட்டம் - 607 204 அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018.
நாள் : 24.06.2025

துரைமுருகன்
பொதுச் செயலாளர்
தி.மு.க.

கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.ராசா எம்.பி. பங்கேற்பு

சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட சட்டமன்ற தொகுதிகள் கொளத்தூர், திரு.வி.க.நகர், அம்பத்தூர், வில்லிவாக்கம் ஆகிய தொகுதிகளின் பாகமுகவர்கள் (BLA2) ஆலோசனை கூட்டம்!

மாவட்ட செயலாளர் – அமைச்சர் – பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!

சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட கொளத்தூர், திரு.வி.க.நகர், அம்பத்தூர், வில்லிவாக்கம்ஆகிய சட்டமன்ற தொகுதிகளின் பாகமுகவர்கள் (BLA2)ஆலோசனை கூட்டம் கீழ்க்கண்ட அட்டவணைப்படிநடைபெறுகிறது. இக்கூட்டத்தில் கழக துணை பொதுச் செயலாளரும், மண்டல தேர்தல் பொறுப்பாளருமான ஆ.ராசா, எம்.பி கலந்து கொண்டு ஆலோசனை வழங்குகிறார்.

நாள்	நேரம்	சட்டமன்ற தொகுதி	இடம்
25.06.2025 புதன்	காலை 10.30 மணி	கொளத்தூர் தொகுதி மற்றும் திரு.வி.க.நகர் தொகுதி	அரிச்சந்திரா மைதானம் ஜி.கே.எம்.காலனி, கொளத்தூர்
26.6.2025 வியாழன்	மாலை 6.00 மணி	அம்பத்தூர் தொகுதி மற்றும் வில்லிவாக்கம் தொகுதி	மோகன் கார்டன் கொரட்டூர்

மேற்கண்ட பாகமுகவர்கள் (BLA2) கூட்டத்திற்கு சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட கொளத்தூர், திரு.வி.க.நகர், அம்பத்தூர், வில்லிவாக்கம் ஆகிய நான்குதொகுதிகளுக்குட்பட்ட இந்நாள் / முன்னாள்சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள்,மாவட்ட நிர்வாகிகள், பகுதி செயலாளர்கள், தொகுதி பார்வையாளர்கள், வட்ட கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பாகமுகவர்கள் (BLA2) தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு
செயலாளர், சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.

சென்னை தென்மேற்கு மாவட்டம்

தியாகராயர்நகர் கிழக்கு / மேற்கு பகுதிக்குட்பட்ட வட்டங்களுக்கான BLA-2, BLC, BDA ஆலோசனைக் கூட்டம்!

பகுதி கழக செயலாளர்கள் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. - கே.ஏழுமலை எம்.சி. அறிவிப்பு!

வ.எண்	தேதி	வட்டம்	இடம்	நேரம்	தலைமை
1.	26.06.2025	141	சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம்	மாலை 6.00 மணிக்கு	லலிதபுரம். என்.துரை
2.	26.06.2025	135 “A”	அம்பேத்கார் சமுதாய கூடம் 84வது தெரு	மாலை 6.00 மணிக்கு	மு.செல்வகுமார்
3.	28.06.2025	131 “A”	கருணீகர் மண்டபம்	மாலை 6.00 மணிக்கு	எம்.கே.மூர்த்தி
4.	28.06.2025	141 “A”	சேவா சங்கம் சி.ஐ.டி நகர்	மாலை 6.00 மணிக்கு	எஸ்.லட்சுமிகாந்தன்
5.	29.06.2025	134	மாம்பலம் சந்திரசேகர் இல்லம்	காலை 9.00 மணிக்கு	சக்திவேல்
6.	29.06.2025	134 “A”	சந்திரசேகர் மினி ஹால்	காலை 9.00 மணிக்கு	ஜி.பி.செந்தில்குமார்
7.	29.06.2025	130	ஆர்த்தி மஹால் 100அடி சாலை	மாலை 6.00 மணிக்கு	டி.கமல்
8.	29.06.2025	130 “A”	செங்குந்தர் மண்டபம்	மாலை 6.00 மணிக்கு	தட்சன் ஹரிஹரன்
9.	30.06.2025	132	அன்னை அஞ்சுகம் மண்டபம்	மாலை 6.00 மணிக்கு	ந.மோ.முரளி
10.	30.06.2025	131	மாநகராட்சி அலுவலகம்	மாலை 6.00 மணிக்கு	மு.ம.செந்தில்குமார்
11.	01.07.2025	135	பிரியதர்ஷினி ஹால்	மாலை 6.00 மணிக்கு	எம்.எஸ்.பழனி
12.	01.07.2025	132 “A”	மாநகராட்சி அலுவலகம்	மாலை 6.00 மணிக்கு	கே.எஸ்.வெடில்ங் ராஜா
13.	02.07.2025	133, 133 “A”	சர்.பி.டி.தியாகராயர் அரங்கம்	மாலை 6.00 மணிக்கு	பி.ஜெயக்குமார் பி.மாரி

மேற்கண்ட கூட்டங்களில், மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ., தொகுதி பார்வையாளர் ரத்னா லோகேஸ்வரன் எம்.சி., தலைமை செயற்குழு உறுப்பினர் கோ.சு.மணி, மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட பிரதிநிதிகள் - அனைத்து அணிகளின் மாவட்ட நிர்வாகிகள், வட்ட கழக நிர்வாகிகள் மற்றும் BLA-2, BLC, BDA (Booth Digital Agent) கலந்து கொள்கிறார்கள்.

ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ.
செயலாளர், தியாகராயர் நகர் கிழக்கு பகுதி

கே.ஏழுமலை எம்.சி.
செயலாளர், தியாகராயர் நகர் மேற்கு பகுதி

பெரம்பலூர் மாவட்டம்

பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல்

தேர்தல் முடிவு! தலைமைக் கழக அறிவிப்பு

"திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில் பெரம்பலூர் மாவட்டத்தில், பொதுக்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட அழகு நீலமேகம் அவர்கள் வேப்பூர் கிழக்கு ஒன்றியக் கழக பொறுப்பாளராக நியமிக்கப்பட்டு ள்ளதால், கழக சட்டதிட்ட விதிகளின்படி, ‘ஒருவருக்கு ஒரு பொறுப்பு’ என்ற அடிப்படையில், அழகு நீலமேகம் அவர்கள், தான் வகித்து வந்த பொதுக்குழு உறுப்பினர் பொறுப்பிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டதால்; பெரம்பலூர் மாவட்டம், **பொதுக்குழு உறுப்பினர்** பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து **2025, ஜூன் 23 (திங்கட்கிழமை) அன்று ரூ.25000/வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.**" என தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டதையொட்டி;

பெரம்பலூர் மாவட்டம், பொதுக்குழு உறுப்பினர் பொறுப்புக்கு டி.கே.இராமச்சந்திரன் அவர்கள் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்திருந்த காரணத்தால், அவரது மனு ஏற்கப்பட்டு,

பெரம்பலூர் மாவட்டம், பொதுக்குழு உறுப்பினராக,
திரு. **டி.கே.இராமச்சந்திரன்,**
4/121, பீல்வாடி, சித்தளி அஞ்சல்,
குன்னம் வட்டம்,
பெரம்பலூர் மாவட்டம் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018.
நாள் : 24.06.2025

துரைமுருகன்
பொதுச் செயலாளர்
தி.மு.க.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

ஜி.பி. சோமசுந்தரம்

ஜூன் 25 (1971)



கழகத்தின் முதுபெரும் தலைவர். “பட்டாளத்துச் சிங்கம்” எனவும், “சேலத்துப் பெரியார்” எனவும் கழகத் தோழர்களால் அன்போடு அழைக்கப்பட்டவர்.

திராவிட இயக்கத் தொடக்க காலத்திலிருந்து தொண்டாற்றி வந்தவர். பேரறிஞர் அண்ணா அவர்களின் அன்புக்கும், மரியாதைக்கும் உரிய கழக முன்னணித் தலைவர்களில் முக்கியமானவராக விளங்கியவர்.

கழகத்தின் தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினராகவும் – சேலம் மாவட்டக் கழகச் செயலாளராகவும் – மாநிலங்களவை உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.